# லஞ்ச் டைம் பஞ்ச்

கெமிஸ்ட்ரி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் செயல் முறை விளக்கம் செய்து கொண் டிருந்தார். மெழுகுத்திரி எரிந்து கொண்டிருந்தது. சமன்பாடு எழுத கரும் பலகையில் திரும்பி எழுதிக் கொண்டிருந்தார், ஆசிரியர். சுருளிக்கு சும்மா இருக்க முடியவில்லை. மெதுவாக பூனை போல நடந்து சென்று மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தான். ஓரக்கண்ணால் கவனித்த ஆசிரியர் கையிலிருந்த டஸ்டரை குறிபார்த்து வீச சுருளி தலையை பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான்.



“ஏண்டா, திமிரா..?” . சார் கேட்க

“சும்மா... விளையாட்டுக்கு சார்...”

“சரி, சரி நானும் விளையாட்டுக்குத்தான் டஸ்டரை எறிந்தேன்... சரிக்கு சரியாயிருச்சி... உட்கார்...”

தலையைத் தடவிக் கொண்டே உட்கார்ந்தான் சுருளி. குமாருக்கு சிரிப்பு தாங்க முடியவில்லை.

“வெளியே வா ... உன்னைப் பார்த்துக் கொள்ளுகிறேன்” என்று சுருளி கண்களாலேயே குமாரை மிரட்டிக் கொண்டிருந்தான்.

டிங் ... டிங் ... டிங் ... லன்ச் டைம் மணியடிக்க புத்தகங்களை ஒதுக்கி வைத்துவிட்டு டிபன் பாக்சை தூக்கிக் கொண்டு ஓடினோம் சோம்பேறி மடத்துக்கு. சோம்பேறி மட ஆலமரம் மெல்ல தன் இலைகளை ஆட்டியது, எங்களை வரவேற்பது போல இருந்தது. ஆலமர விழுதுகளுக்கிடையே உட்கார்ந்து பேசுவதே ஒரு இன்பமான அனுபவம்.

“ஏண்டா, நான் அடி வாங்குகிறது உனக்கு சிரிப்பா இருக்கா?” டிபன் பாக்சைத் திறந்து கொண்டே சுருளி கேட்டான்.

“ம்...அப்புறம் சிரிக்காம அழச் சொல்றியா...சாமி...ஆனாலும் சூப்பர் ஷாட்டா, சரியா குறிபார்த்து அடிச்சாரில்ல...”

எனக்குச் சிரிப்பாக இருந்தது. அடக்க முடியாம சிரிக்க

“ஏய்...சாமி உனக்கும் நக்கலா போச்சா...?” சுருளி கோபமாக என்னைப் பார்த்தான். சுருளியின் இடது கை இன்னும் தலையில் தான் இருந்தது.

“சரி, சரி, வா உன் தலையைத் தடவி விடுறேன்” என்று நான் சொல்ல “ ஆமாம் ... ஆமாம் ...





அப்படியே அவன் தலையைத் தடவி எத்தனை அடிக்குக் கொம்பு முளைச்சிருக்குன்னு சொல்லு…” வாயில் சாப்பாட்டை வைத்துக் கொண்டே நக்கலடித்தான் குமார்.

“போதும் நிறுத்துடா….. விளையாட்டுக்காகத்தானே செய்தேன். அதையேன் இவ்வளவு சீரியஸாக எடுத்துக்கறாங்களோ தெரியலை. விளையாட்டை விளையாட்டா எடுத்துக்க மாட்டேன்கிறார்கள்...?” அலுத்துக் கொண்டான் சுருளி.

“படிப்ப, படிப்பா எடுத்துகிட்டா மெழுகுதிரியை விளையாட்டா அணைப்பியா…? சீரியஸா தொண்டை தண்ணி போக நமக்காக விளக்கிச் சொல்லி கொடுத்துக் கொண்டிருக்கிற அவருகிட்ட நேரம் காலம் தெரியாம விளையாண்டா இப்படித்தான் கொம்பு முளைக்கும்… அப்படித்தானே சாமி … குமார் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்லுவது போல் நடித்தான்.

“சரி சாமி… விளையாட்டுக்கு செய்யறது தப்பா?” சுருளி கேட்டான்.

“ஏய் சுருளி இதற்கு சாமி எப்படி பதில் சொல்வான், தெரியுமா …? விளையாடுவது தப்பில்லத்தான், ஆனாலும் அது விளையாட்டைப் பொறுத்தது … விளையாடும் நேரத்தைப் பொறுத்தது … விளையாடுபவரின் மூடைப் பொறுத்தது …யாரிடம் விளையாடுகிறோம் என்பதைப் பொறுத்தது … என்று ஆரம்பிச்சி மூச்சி விடாமல் விளக்கப் போறான் … இல்லையா சாமி…?”

“ஏய் குமார், சரியா சொல்றடா… எப்படி இப்படி மாறின? நானும் கிண்டலாக கேட்க குமார் அப்புறம் இத்தனை வருஷமா கூட படிக்கிறேன் இது கூட தெரியாதா…? சரி சரி சொல்லு விளையாட்டுக்கு செய்றதுல என்ன தப்பு?”

“உங்களுக்கு ஒரு பழமொழி தெரியுமா?”

“விளையாட்டு வீணையானது …” இது தானே

“வீணை இல்லடா வினை” குமார்.

“சரி எதுவோ சொல்லு … சுருளி”

“ஆமாம் சுருளி நிறைய நேரங்களில் நம்ம செய்ற விளையாட்டு வினையாகி விடுகிறது”. வேதாகமத்தில் கூட நீதிமொழிகள் 10:23 -ல் “தீவினை செய்வது மூடனுக்கு விளையாட்டு” என்றுள்ளது.

“புரியலடா சாமி”

“ஒருவருக்கு விரோதமாக தீமையான செயல் ஒன்றை செய்து விட்டு சும்மா விளையாட்டுக்கு செய்தேன் என்று சொல்வது சரியா… நம்ம செய்கிற விளையாட்டு மற்றவர்களைப் பாதிக்கும் போது அது தீமையாக மாறி விடுகிறது. அதனாலத்தான் சில நேரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் லூசு மாதிரி விளையாடாதடா என்று திட்டுகிறார்கள். எனவே விளையாடுவது தப்பில்லாட்டியும் பார்த்து விளையாடணும். மற்றவர்களை பாதிக்காமல் விளையாடணும்”.

அப்புறம் சொல்லுடா சாமி … குமார் ஆர்வமாக கேட்டான்.

நீதிமொழிகள் 26:18,19-ல் “பைத்தியக்காரன் எப்படியிருக்கிறானோ, அப்படியே தனக்கடுத்தவனை வஞ்சித்து நான் விளையாட்டுக்கல்லவா செய்தேன் என்று சொல்லுகிற மனுஷனும் இருக்கிறான்” என்று சாலமோன்

இராஜா சொல்லுகிறார்.
"சார் கஷ்டப்பட்டு பாடம் நடத்தும் போது அத ஒழுங்கா கவனிக்காம பைத்தியக்காரன் மாதிரி நாலு காலுல நடந்து போய் அவருக்குத் தெரியாம மெழுகுதிரியை அணைச்சிட்டு அவர் கண்டு பிடிச்சதால விளையாட்டுக்குச் செய்தேன் என்று பொய் சொல்லி ஏமாத்தப் பார்க்கிற ... ஒரு வேளை அவர் கண்டு பிடிக்காட்டி யாரு அணைச்சது, யாரு அணைச்சது? என்று அவர் நாயா கத்தணும் இல்லாட்டி அவர் காற்றில் தன்னால அணைஞ்சிருச்சின்னு நினைச்சி ஏமாந்து விடுவாருன்னு தப்பு கணக்கு போட்டு விளையாடுறது ..." என்ன சுருளி நான் சொல்றது சரியா...?

சுருளி டொக்கென்று தலையை கீழே போட்டுக் கொண்டான்.

"இது மட்டுமில்லடா இன்னும் நீதிமொழிகள் 26:2-ல் சாலமோன் சொல்கிறார் கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப் போல இருக்கும் ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும் என்று".

"ஆமாண்டா சாமி நிறைய நேரங்களில் மற்றவர்களை எந்த விதத்திலாவது பாதிக்கிற மாதிரி பேசிட்டு விளையாட்டுக்குத்தான் சொன்னேன் நீயேன் இவ்வளவு சீரியஸாகிட்டன்னு கேட்கிறாங்கடா ... குமார் சொன்னான்.

"ஆமாண்டா குமார், நாம் பேசுவதும் நமது செயல்களும் மற்றவர்களைப் பாதிக்குமானால் அது நிச்சயமாக விளையாட்டல்ல. விளையாட்டினாலேயே நிறைய நேரங்களில் உயிரைக் கூட சிலர் இழந்திருக்கிறார்கள் தெரியுமா? விளையாட்டு என்பது நமக்கும் மற்றவர்ளுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிற செயல். ஆனால் அந்த விளையாட்டைக் கொண்டு மற்றவர்களை பாதிக்க செய்வதோ, எரிச்சல் படுத்துவதோ தவறு. so, சுருளி பார்த்து விளையாடு".

"புரியுதுடா ... இதை நீ நேத்தே சொல்லியிருக்கலாம்".

"இங்க பாருடா அவன் கையில ஒரு வண்டிச் சாவி".

"இது அண்ணனோட வண்டி சாவி ... விளையாட்டுக்கு ... சாரி பழிவாங்குகிறதுக்கு எடுத்திட்டு மறந்து கொண்டு வந்து விட்டேன் ... இண்ணைக்கு எப்படி வேலைக்கு போனானோ தெரியல" ... பரிதாபமாக முழித்தான் சுருளி.

ஏய் சுருளி ... கவலைப்படாத அடுத்த கொம்புக்கும் ரெடியாயிட்ட"

குமார் சிரிக்க சுருளி தலையை பிடித்துக் கொண்டான்.

மணியடிக்க ஓடினோம் வகுப்புக்கு.

காத்திருங்கள் அடுத்த லன்ச்ஞ் டைம் வரை...

- மேபல் டேனி

யூத் டைஜஸ்ட்டை இணைய தளத்திலும் வாசிக்கலாம்

Youthdigest.in